3. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) 'குமுதம்' வார இதழ் நிறுவனத்தில் உருவாகியுள்ள நிருவாகப் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர் 'குமுதம்' வார இதழ் அதிபர் திரு. பழனியப்பன், அதே இதழின் நிருவாக இயக்குநர் திரு. வரதராஜன் மீது வழக்குத் தொடுத்து கையாடல் போன்ற குற்றங்களைச் சுமத்தியது குறித்து இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன், டாக்டர் இ.எஸ்.எஸ். ராமன் ஆகியோர் விதி 56-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக இதை எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்தவர்களில் யாரேனும் ஒருவர், சுருக்கமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரலாம். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து தமிழகத்திலே தலைசிறந்த இரண்டு வார இதழ்கள் ஒன்று குமுதம், இன்னொன்று ஆனந்த விகடன் வெளிவந்துகொண்டிருக்கின்றன. நம்முடைய தமிழகத்திலே முத்திரை பதித்து மிகச் சிறந்த வார இதழ்களாக அவை மக்கள் கைகளிலே சென்று, நல்ல விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வந்தன. அப்படிப்பட்டவற்றில் ஒன்றான 'குமுதம்' வார இதழின் உரிமையாளர் திரு. ஜவகர் பழனியப்பன் என்பவர், இப்போது வெளிநாட்டில் இருந்து கொண்டிருக்கிறார். அவர் வெளிநாட்டில் இருக்கிற காரணத்தினாலே திரு. வரதராஜன் என்கின்ற நிருவாக இயக்குநரிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். இப்போது திரு. பழனியப்பன் என்பவர் ஒரு வழக்குத் தொடுத்திருக்கிறார். நம்முடைய சென்னை போலீஸ் கமிஷனர் ஆபிசில் ஒரு வழக்கைப் பதிவு செய்து, அதன் காரணமாக திரு. வரதராஜன் என்பவர் கைது செய்யப்பட்டு, அவர் நிபந்தனை ஜாமீனில் வெளியில் விடப்பட்டிருக்கிறார். இன்று திரு. பழனியப்பன் அவர்கள் கொடுத்திருக்கிற அந்தப் புகாரில், புரசைவாக்கத்தில் இருக்கக்கூடிய 'குமுதம்' அலுவலகம் எங்களுடைய குடும்பச் சொத்து, என்னுடைய தாத்தா, என்னுடைய தந்தையார் போன்றவர்களெல்லாம் முதலீடு செய்து, எங்களுடைய உழைப்பை மட்டும், எங்களுடைய சொத்தை மட்டுமே வைத்து உருவாக்கப்பட்ட நிறுவனம், அந்தக் "குமுதம்" நிறுவனம் என்றும், "மாதத்திற்கு 6 இலட்சம் பிரதிகள் விற்பனை செய்யப்பட்டு, அதிக இலாபத்தில்

இயங்கிக்கொண்டிருக்கிற அப்படிப்பட்ட 'குமுதம்' நிறுவனத்தை இன்று நட்டக் கணக்குக் காட்டி, சொல்லப்போனால் பத்திரிகையாளர்கள் இவ்வளவுதான் சம்பளம் எடுக்க வேண்டுமென்ற விதிமுறைகள் இருந்தபோதிலும், அந்த விதிமுறைகளை மீறி அதற்கும் அதிகமாக, பத்து மடங்கு அதிகமாக சம்பளத்தை எடுத்து, இன்றைக்கு நட்டக் கணக்கைக் காட்டி எங்களை மோசடி செய்கிறார்கள்" என்றும் வழக்குத் தொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு வார இதழ் நிறுவனத்தை, இவர்களுடைய பிரச்சினையால் மூடிவிடக்கூடாது; அது நின்று விடக்கூடாது. இந்த வழக்கில், காவல் துறை வழக்குப் பதிவு செய்து, புலனாய்வு செய்துகொண்டிருக்கிற இந்த நேரத்தில், அரசுக்கு என்ன தகவல் கிடைத்திருக்கிறது, யாருக்குச் சொந்தமான இடம், ஏன் இப்படிப்பட்ட பிரச்சினை வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாக நான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

திரு. தி. வேல்முருகன்: Speaker Sir, Speaker Sir,... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிவிப்பு கொடுத்திருப்பதை நான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) என்ன? திரு. செங்கோட்டையன். (குறுக்கீடுகள்)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டிலே நிலவி வருகிற பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்ற நேரத்தில், அதற்கெல்லாம் கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கின்றபோது, தனி நிறுவனத்தைப் பற்றி இவ்வளவு அக்கறை எடுத்து நீங்கள் அவருக்கு அனுமதி வழங்கியதற்கு என்ன காரணம் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது என்னுடைய விருப்பம். Don't question it. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, என்னுடைய அதிகாரத்திற்குட்பட்டது. (குறுக்கீடுகள்) என்னுடைய அதிகாரத்திற்கு

2010 ஏப்ரல் 26] [பேரவைத் தலைவர்]

உட்பட்டது. எதை எடுக்க வேண்டும், எதை எடுக்கக்கூடாது என்பது நான் முடிவெடுக்க வேண்டிய விஷயம். அதற்கு நீங்கள் உள்நோக்கம் கற்பிக்க வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் ஒரு நிகழ்ச்சி குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் அல்லது ஒத்திவைப்புத் தீர்மானம் போன்ற எந்தத் தீர்மானங்களைக் கொடுத்தாலும், அந்தத் தீர்மானங்கள் அளித்தவர்களை அழைத்துப் பேச வைப்பதுதான் முறையாக இருக்கிறது. அந்த முறைப்படி இன்றைக்குக் 'குமுதம்' வார இதழ் பிரச்சினை குறித்து, திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அளித்துள்ள அந்தக் கருத்துகளையொட்டி நான் சிலவற்றை இங்கே கூற விரும்புகின்றேன்.

'குமுதம்' வார இதழ், புகழ்பெற்ற வார இதழ்களிலே ஒன்று. அந்த இதழின் தொடர்புடைய பங்குதாரர்கள் என்று கூறப்படுகின்றவர்களில் உரிமையுடையவர், ஏற்கெனவே அந்த இதழை ஆரம்பித்து மிகுந்த செல்வாக்கோடு அதனைத் தமிழகத்திலே அறிமுகப்படுத்திய மூத்தோர்கள் மறைந்துவிட்டாலும்கூட, அவர்களுடைய பிரதிநிதியாக இருந்து அந்த இதழை நடத்துவதற்கு முன்வந்த திரு. ஜவகர் பழனியப்பன் வெளிநாட்டிலே இருந்தாலும், அண்மையிலே அவர் தமிழ்நாட்டிற்குத் திரும்பி வந்து, தான் யாரிடத்திலே அந்தப் பத்திரிகையை ஒப்படைத்துவிட்டுச் சென்றாரோ, அவரிடத்திலே சில விளக்கங்களைக் கேட்டதன் அடிப்படையில் இருவருக்கும் தகராறு ஏற்பட்டுள்ளது. இங்கே நம்முடைய நண்பர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தக் குற்றச்சாட்டுகள் எல்லாம் சாதாரணமானவை அல்ல. அவை உண்மைகளாக இருக்குமானால், சாதாரணமானவை அல்ல. எனவேதான் அந்தக் குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்ட, அல்லது விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்ற வகையில் காவல் துறையினர் அதிலே வரதராஜன் என்பவரைக் கைது செய்திருக்கிறார்கள். பொதுவாக, பத்திரிகைகளை ஒடுக்குவது அல்லது அவர்கள்மீது வழக்குத் தொடுப்பது, அவர்களைச் சிறையில் அடைப்பது, அவர்களைச் சட்டசபைக் கூட்டத்திலே கொண்டுவந்து கூண்டிலே நிறுத்துவது போன்ற எந்த நிகழ்வுகளையும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் விரும்புவதில்லை, அதை ஏற்றுக்கொள்வதுமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

[கலைஞர் மு. கருணாநிதி] [2010 ஏப்ரல் 26 முற்பகல் 10-25

பத்திரிகைகள்மீது பல நேரங்களில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த முறையிலே அவர்கள் எந்த நேரத்திலே நடவடிக்கைக்கு உள்ளானாலும், உடனடியாக அதுபற்றி தலையிட்டு கண்டனங்கள் எழுப்பி, அந்தப் பத்திரிகையாளர்களுக்கு நீதி தேடித் தருவதிலே இன்றைய ஆளுங்கட்சி என்றைக்கும் முனைப்பாக இருந்திருக்கின்றது.

அந்த வகையில், இன்றைக்குக் 'குமுதம்' பத்திரிகையினுடைய ஆசிரியர் என்று சொல்லப்படுபவர்களிலே ஒருவர், நிருவாகத்திலே இருந்தவர் ஒருவர், வரதராஜன் என்பவர் கைது செய்யப்பட்டார் என்று கேள்விப்பட்டவுடன், அதுகுறித்து எனக்கு வந்த தகவல்களின் அடிப்படையில் அவரை உடனடியாக விடுதலை செய்வதற்கான சட்டங்கள் இல்லை என்றாலுங்கூட, நிலைமைகள் இல்லை என்றாலுங்கூட, அவற்றுக்கிடையிலேயும் அவர் சிறை புகத்தான் வேண்டும் என்பதுபோல வற்புறுத்தத் தேவையில்லை என்பதை நம்முடைய அரசு வக்கீல்களுக்கு எடுத்துச் சொல்லி, நம் தரப்பிலே அவர்களை ரிமாண்டு செய்வதற்கு வற்புறுத்த வேண்டாம் என்றும் எடுத்துக் கூறி, அவர் உடனடியாக வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார், சில நிபந்தனைகளோடு. வழக்கு விவரம் எனக்குத் தெரியாது. சில நண்பர்கள் இதிலே ஒரு சமாதான முயற்சியை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணுகிறார்கள்.

ஒரு பெரிய பத்திரிகை, வாரப் பத்திரிகை, கருத்து வேறுபாடுகள் இருந்தாலும்கூட, தமிழகத்திலே எல்லோருடைய கைகளிலும் இருக்கின்ற ஒரு பத்திரிகை. அந்தப் பத்திரிகைக்கு ஒரு ஊனம், அதற்கு ஒரு தடங்கல், அதனுடைய வளர்ச்சியிலே ஒரு முட்டுக்கட்டை என்ற நிலையில் இந்தச் சம்பவம் வந்துவிடக்கூடாது என்பதிலே நான் மிகுந்த அக்கறை கொண்டவன்.

ஏற்கெனவே இதுபோன்ற சில பத்திரிகைகளுடைய கூடாரத்தில் ஏற்பட்ட புகைச்சல், போர்—அந்த நேரங்களில் நானே தலையிட்டு, அவர்களிடம் அதிகாரிகளை அனுப்பி அவர்களிடத்திலே ஒரு சமரச உடன்பாட்டை ஏற்படுத்தி, அவர்களுக்குள் ஏற்பட்ட வழக்குகள் எதுவாக இருந்தாலும், பத்திரிகை விழுந்துவிடாமல் பார்த்துக்கொண்ட அந்த வரலாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

2010 ஏப்ரல் 26] [கலைஞர் மு. கருணாநிதி]

அறிஞர் அண்ணா அவர்கள் வாழ்ந்த காலத்தில், முதலமைச்சராக இருந்த காலத்தில் அமெரிக்காவுக்குச் சிகிச்சைக்குப் போனபோதுகூட, சுற்றுப் பயணம் செல்ல நேர்ந்தபோதுகூட, இங்கே ஒரு பிரபல நிறுவனத்திலே ஏற்பட்ட தொழிலாளர் தகராறு— என்னைப் பார்த்துச் சொல்லிவிட்டுப் போனார்கள்,

"அது பாரம்பரியமான நிறுவனம்; நமக்கு எதிர்ப்பாக இருந்தாலும், ஒரு பாரம்பரியமான நிறுவனம்; அங்கே ஏற்பட்டிருக்கிற அந்தத் தொழிலாளர் தாவாவை வளரவிடாமல் பார்த்துக்கொள்" என்று இங்கே சொல்லிவிட்டுப் போனது மாத்திரம் அல்ல; அமெரிக்காவிலேயிருந்து 3, 4 முறை தொலைபேசியின்மூலமாகத் தொடர்பு கொண்டு வலியுறுத்தினார்கள். அப்போது நானும், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும், நம்முடைய பேராசிரியரும்தான் அந்தத் தொழிலாளர்களையெல்லாம் அழைத்து, மறைந்த N.V.N. அவர்கள் மூலமாக சமரசம் பேசி, அந்த நிறுவனத்தை நடத்துவதற்கு வழிவகுத்துக் கொடுத்தோம்.

முற்பகல் 10-30

அதற்குப் பிறகு குடும்பச் சண்டையின் காரணமாக ஏற்பட்ட மோதல், ஒரு பத்திரிகையே நிறுத்தப்பட்டுவிடுமோ என்று வந்தபோது, "Annadurai also spoke" என்கின்ற அளவிற்குச் செய்திகளை வெளியிட்டார்கள். அப்படிப்பட்ட பத்திரிகையைக்கூட, அது தொடர வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு, நாங்கள் தலையிட்டு அப்போது ஓய்வுபெற்ற I.A.S. அதிகாரியாக இருந்த நண்பர் குகன் அவர்களை, அவர்களுடைய இல்லத்திற்கே அனுப்பி அவர்கள் மூலமாக சமரசம் செய்து வைத்து, அந்த சமரசத்தின் காரணமாக ஏற்பட்ட நல்ல உடன்பாட்டிற்குப் பிறகு, அந்தப் பத்திரிகை அதிபர் ஒரு நன்றிக் கடிதத்தை எனக்கு எழுதி அனுப்பியிருக்கிறார். இன்றைக்கும் அந்த நன்றிக் கடிதம் என்னிடத்திலே பத்திரமாக இருக்கின்றது. நான் எந்தப் பத்திரிகை என்று குறிப்பிட விரும்பவில்லை. உங்களுக்கே அந்தக் கருத்தை விட்டுவிடுகிறேன். நீங்களே ஊகித்துக்கொள்வீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும்.

அதைப்போலவே, 'குமுதம்' பத்திரிகையும் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்கின்ற ஆசை உடையவன் நான். தி.மு.கழகத்தைப் பற்றிச் சில நேரங்களிலே கருத்து வேறுபாடுகள், கேலிச் சித்திரங்கள் இவையெல்லாம் வந்திருந்தாலும்கூட, அவற்றைப் பார்த்து ரசிப்பவனே தவிர, அதற்காக ஆத்திரப்படுபவன் அல்ல நான்

என்பதால் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பத்திரிகையும் நின்றுவிடாமல் நடக்க வேண்டும்; அங்கே அதனுடைய பங்குதாரர்களுக்குள்ளே ஏற்பட்ட சண்டையா அல்லது முதலாளி, தொழிலாளி தகராறா என்பதையெல்லாம் ஆராய்ந்தறிந்து ஓர் உடன்பாடு ஏற்படுவதற்கு முன்னால், சட்ட ரீதியாகவோ அல்லது போலீஸ் துறை சார்பாகவோ எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்று நான் கருதுகின்றேன். சட்டப்படி உத்தரவிட முடியாது. ஏனென்றால் ஒரு வழக்கைத் திரும்பப் பெறுவது என்பது அரசினுடைய உரிமையாக இருக்கலாம். ஆனால் அதை எப்படி நடத்துவது என்பதையெல்லாம் சொல்லிக்கொடுக்கின்ற அந்த முறையை நாம் யாருக்கும், நீதிமன்றத்திற்கோ அல்லது யாருக்கோ கற்றுத் தர முடியாது; உத்தரவிட முடியாது.

எனவே இருவரிடையே ஒரு சமரச ஏற்பாடு உருவாகி அது வரதராஜனாக இருந்தாலும் சரி அல்லது ஜவஹர் பழனியப்பனாக இருந்தாலும் சரி, எங்கே நியாயம் இருக்கிறதோ, அந்த நியாயத்தை உணர்ந்து நல்ல தீர்ப்பு வழங்குவதற்கு ஒரு குழு அமைத்தாவது அதற்கான ஏற்பாடுகளை, 'குமுதம் வாழ வேண்டும்' என்பதற்காக நிச்சயமாக இந்த அரசு செய்யும் என்று குறிப்பிட்டு, திரு. ஞானசேகரன் அவர்களுடைய அந்தக் கவலைக்கு மருந்தாக இந்தச் செய்தியைச் சொல்லி, இந்த அளவில் அமைகின்றேன், வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *25-4-2010* அன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில். . . (குறுக்கீடு)

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கு ஒரு பத்திரிகையில் நடைபெற்ற தாவாவை எடுத்துக் கூறி, இதற்கு முன்னால் இருந்த தி.மு.க. அரசு—எம்மாதிரியெல்லாம் நாங்கள் கண்ணியத்துடன் கடமையாற்றியிருக்கின்றோம் என்ற தகவலையும் சொல்லி, நெருடலாக, சில பத்திரிகையாளர்கள் இந்தச் சட்டமன்றத்திற்கு அழைத்து வரப்பெற்ற சம்பவங்கள் எல்லாம் நடந்ததாக எடுத்துக் கூறினார்கள். (குறுக்கீடுகள்) அதுதான், நான் கேட்டுவிடுகிறேன், உரையை முடித்துக்கொள்கிறேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது clarification-ஆ? சார்,

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2010 ஏப்ரல் 26] [பேரவைத் தலைவர்]

உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* No, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. ஓ. பன்னீர்செல்வம் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. *(குறுக்கீடுகள்)* 25-4-2010 அன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவின்போது, வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்து. *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

முற்பகல் 10-35

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் *(குறுக்கீடுகள்)* பத்திரிகையாளர்களுக்கிடையே நடைபெறுகின்ற தகராறுகளில் அரசு எப்போதும் நல்ல எண்ணத்தோடு நடந்து கொண்டது என்பதற்கு உதாரணம்தான் சொன்னேன். யாரோ சில வன்முறையாளர்கள் ஒரு பத்திரிகை அலுவலகத்திலே நடத்திய *(குறுக்கீடுகள்)* செயல்களுக்கு யாரும் பொறுப்பேற்க முடியாது. தருமபுரியில் பஸ்களை கொளுத்தினார்கள். நீங்கள் பொறுப்பேற்க முடியுமா? ஆகவே, யாரோ செய்த காரியங்களுக்கு யாரும் பொறுப்பேற்க முடியாது. *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எதிர்க்கட்சி துணைத் தலைவர், நீங்கள் ஏற்கனவே முதல்வராக இருந்து அனுபவப்பட்டவர்கள். நீங்கள் இந்த subject-க்கு சம்பந்தமில்லாத ஒரு subject-ஐ அவையில் clarification என்று பேசலாமா? உட்காருங்கள் முதலில்.

(ஆ) சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவின்போது சிலர் கறுப்புக் கொடி காட்டியதால் ஏற்பட்ட கலவரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *25-4-2010* அன்று சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு விழாவின்போது வழக்கறிஞர்களிடையே ஏற்பட்ட மோதல் குறித்து அ.இ.அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். இரவிச்சந்திரன், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின்